DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 77/2021 |
| Deposition of witness | : | PW - 10 |
| Name | : | கபிலன் |
| Father's /Husband Name | : | நாகராஜன் |
| Village | : | தாம்பரம் |
| Taluk | : | தாம்பரம் |
| Age | : | 32 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day September 2024. Both Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தாம்பரம் காவல் கட்டுப்பாட்டு அறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.09.2020-ம் தேதி பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வசந்தா என்பவரை தலைமைக்காவலர் விஜயகுமார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.2159/2020 சட்டப் பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 06.09.2020-ம் தேதி பகல் 01.00 மணிக்கு இவ்வழக்கில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், நன்மாறன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேலும், காயம்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.3-க்கு சிகிச்சையளித்த மருத்துவர் ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுகள் மற்றும் காயச்சான்றுகள் பெற்று வந்தேன். இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் முன்பிணையில் சென்றுவிட்டதால் அவர்களை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. மேலும், வழக்கினை பதிவு செய்த தலைமைக்காலர் விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

சம்பவத்திற்கு முன்விரோதம் என்னவென்று விசாரணையில் தெரியவந்தது என்றால் சொத்து பிரச்சனை என்று தெரியவந்தது. புகார்தாரர் அவரது புகாரில் சம்பவம்

யார் யாருக்கு தெரியும் என்று குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.3 சிலம்பரசன் சிகிச்சையிலிருந்து தலைமறைவானதால் காயச்சான்று அளிக்க இயலவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என்னவென்றால் மண்வெட்டி ஆகும். அ.சா.3 சிலம்பரசன் எனது விசாரணையில் மாலை 03.00 மணியளவில் அவர் வீட்டில் இருந்ததாகவும், வாசலில் சத்தம் கேட்டதாகவும் அவர் சென்று பார்த்த போது அவரது தாயார் வசந்தா தலையில் ரத்தம் வடிந்ததாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. அவர் சம்பவ இடத்தில் சம்பவத்தின் போது இருந்து சம்பவத்தை பார்த்ததாக தான் கூறியுள்ளார். அ.சா.3 சிலம்பரசன் எனது விசாரணையில் அவரது தாயாரின் சேலையை 2–வது எதிரி சேதுராமன் இழுத்ததாக கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். அ.சா.4 புவனேஸ்வரி எனது விசாரணையில் அவர் சென்று பார்த்த போது அவரது மாமியாரான சாட்சி வசந்தா தலையில் ரத்தம் வடிந்து கொண்டிருந்ததாக கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். ஆனால் அவர் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்து தான் சம்பவத்தை பார்த்துள்ளார். அ.சா.4 புவனேஸ்வரி சாட்சி வசந்தாவின் சேலையை 2–வது எதிரி பிடித்து வைத்திருந்ததாக கூறியுள்ளாரா என்றால் பிடித்து இழுத்ததாக கூறியுள்ளார், சேலையை பிடித்து அதன் தொடர்ச்சியாக தான் 2–வது எதிரி இழுத்துள்ளார். வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனை காரணமாக இவ்வழக்கில் பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும், சாட்சிகளுக்கு வேறு வகையில் ஏற்பட்ட காயங்களை தவறாக பயன்படுத்தி இவ்வழக்கில் பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.